# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

***சுற்றறிக்கை எண்*: 121** **_தேதி_:-12.12.2018**

**உடன் பாட்டின் மீதான தொடர் நடவடிக்கைகள்**

அன்புள்ள தோழர்களே,

11.12.2018 அன்று நடைபெற்ற AUAB கூட்ட முடிவுகளின் அடிப்படையில், அன்றைய தினம் மாலையிலேயே AUAB தலைவர்கள் BSNL CMD அவர்களை சந்தித்து 3வது ஊதிய மாற்ற பிரச்சனை தொடர்பாக விவாதித்தனர். மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கும், AUAB தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பின்னணியில், 3வது ஊதிய மாற்ற பிரச்சனைக்கு தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என BSNL CMD அவர்களை, AUAB தலைவர்கள் வற்புறுத்தினர். இதற்கு பதில் அளித்த BSNL CMD, விரைவில் DoT, AUAB மற்றும் BSNL நிர்வாகம் ஆகியோருக்கு இடையேயான ஒரு கூட்டம் நடைபெறும் என்றும், அந்தக் கூட்டத்தில் இந்த பிரச்சனையை விவாதிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

**INSTITUTIONAL MECHANISM கூட்டம் விரைவில் நடைபெறும் என DoT**:- BSNLக்கு 4G அலைக்கற்றை வழங்குவது, ஓய்வூதிய பங்களிப்பு அளிப்பதில் அரசு விதிகளை அமலாக்குவது மற்றும் BSNL ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய மாற்றம் ஆகிய பிரச்சனைகளின் தற்போதைய நிலை தொடர்பாக விவாதிக்க தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளரிடம் நேரம் ஒதுக்கித்தர கேட்டுக் கொள்வது என 11.12.2018 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பான AUABயின் கடிதத்தை தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளருக்கு ஏற்கனவே அனுப்பப் பட்டு விட்டது. 03.12.2018 அன்று மத்திய தொலை தொடர்பு அமைச்சர் வழிகாட்டியபடி INSTITUTIONAL MECHANISM உருவாக்குவதற்கான கோப்பு சுற்றுக்கு விடப்பட்டுள்ளது என தொலை தொடர்பு துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த பிரச்சனைகளின் தற்போதைய நிலை தொடர்பாக விரைவில் நடக்க உள்ள அதன் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்.**